## ஊடக வெளியீடு

# இளைஞர் சமூக தலைமைத்துவ முன்னெடுப்பு MAS அதீனாவில் 2022 சர்வதேச சமாதான தினத்தை கொண்டாடியது




2022 செப்டெம்பர் 21, துல்ஹிரிய, இலங்கை: உலக சுகாதார அமைப்பு (WHO), ஐக்கிய நாடுகளின் தன்னார்வத் தொண்டர்கள் (UNV) மற்றும் இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (UNDP) ஆகியவற்றுடன் இணைந்து தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் (NYSC) கூட்டுத் திட்டமான இளைஞர் சமூகத் தலைமைத்துவ முன்னெடுப்பானது(YCLI), ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வதேச சமாதான தினத்தை நினைவுகூரும் வகையில் ஒன்று கூடினர். ‘YCLI சமாதான தின கொண்டாட்டம்’ MAS அதீனா உடன் இணைந்து, 2022ம் ஆண்டு செப்டம்பர் 19 முதல் 21 வரை, துல்ஹிரியவில் உள்ள MAS அதீனா வளாகத்தில், இலங்கை முழுவதிலுமிருந்து வந்திருந்த 500க்கும் மேற்பட்ட இளைஞர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இந்த 3 நாள் நிகழ்வானது இளைஞர்களுக்கான பல்வேறு வகையான செயற்பாடுகளை காட்சிப்படுத்தியது, இதில் விசேட இளைஞர் பாராளுமன்ற அமர்வு, சமாதான கிராமம் மற்றும் சமாதான கொண்டாட்டம் ஆகியவை இலங்கையில் உள்ள இளைஞர் தலைவர்களுக்கு அவர்களின் சமூகங்களில் நல்வாழ்வை மேம்படுத்தும் வகையில் சமூக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான தளத்தை வழங்குகிறது.

முதல் நாள் அனைத்து பங்காளர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ஒன்று கூடி, இளைஞர்கள் தங்கள் சமூகங்களில் பங்கேற்கவும் ஈடுபடவும் வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தும் வகையிலான ''சமாதான தின உறுதிமொழியில்'' கையெழுத்திட்டனர். அர்த்தமுள்ள இளைஞர் பங்கேற்பு என்பது சமூக ஒற்றுமை, நிலையான அபிவிருத்தி மற்றும் சமூக நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்காக கொண்டதாகும்.

NYSC யின் பணிப்பாளர் நாயகம் ப்ரிகேடியர் கலாநிதி டிரான் டி சில்வா அவர்கள், இதில் NYSC இன் பங்கு குறித்து கருத்து தெரிவித்தார். இதன் போது ''இலங்கையின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இதை அங்கீகரிக்கும் வகையில், தேசிய இளைஞர் சேவைகள் மன்றமானது, சீர்திருத்தங்களைச் செய்து தீர்மானம் எடுக்கும் செயல்முறைகளில் இளைஞர்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி, கண்காணிப்பு செய்தலையும் அவர்களிடம் ஒப்படைத்துள்ளது. மொழித் திறன் மற்றும் தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் நாங்கள் இளைஞர்களுக்கு ஆதரவளிக்கிறோம். கற்றுக் கொள்ளவும் சமூகத்திற்கு பங்களிக்கவும் இருக்கும் அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளுமாறு இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்'' என்று கருத்துத் தெரிவித்தார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வு YCLI திட்டத்தின் ஒரு பகுதியாகும், இது சமாதானம், நீதி மற்றும் வலுவான நிறுவனங்களை மேம்படுத்தும், அதேவேளை சுகாதார மேம்பாடு, நிலையான அபிவிருத்தி மற்றும் தன்னார்வ நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பை உறுதிசெய்து, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான இலங்கையை கட்டியெழுப்பும் மாற்றத்தின் முகவர்களாக இளைஞர்கள் செயற்பட உதவுகிறது.

இவ் இணைந்த முன்னெடுப்பு தொடர்பில் பேசிய, இலங்கையிலுள்ள உலக சுகாதார அமைப்பின் பொது சுகாதார நிர்வாகி வைத்தியர் ஷலாலா அஹமடோவா, ''உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் கெப்ரேயஸஸ், ஆரோக்கியமில்லாமல் சமாதானமில்லை மற்றும் சமாதானமில்லாமல் ஆரோக்கியமில்லை.'' என்று கூறியுள்ளதை குறிப்பிட்டு, இது பல சமாதானத்திற்கான பூகோள சுகாதார முன்னெடுப்புகளால் (GHPI) அடையாளப்படுத்தப் படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார். மேலும் கருத்துத் தெரிவித்த அவர் ''இலங்கையில், சமூகங்களை வலுவூட்டுவதன் மூலம் சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதில் சுகாதாரம் கணிசமான பங்கைக் கொண்டுள்ளது. இதுபோன்ற செயல்களில், இளைஞர்கள் தங்கள் திறன்களையும்

திறமையையும் பயன்படுத்தி சமூகத்தை வலுப்படுத்த சுகாதாரம் தொடர்பான விடயங்களைப் பயன்படுத்துவதில் முக்கிய இடத்தைப் பெறுகிறார்கள். எனவே இந்த சர்வதேச சமாதான தினத்தில் இந்த இளைஞர்கள் ஒன்று கூடுவதைக் காண்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வரவிருக்கும் YCLI செயற்பாடுகள், இலங்கை முழுவதும் உள்ள சமூகங்கள் மற்றும் அதன் மக்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்த உதவும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது'' எனவும் குறிப்பிட்டார்.

MAS அதீனாவில் ''இளைஞர்கள், சுகாதாரம் மற்றும் சமாதானத்திற்கான சர்வதேச மையம் வைபவ ரீதியாக தொடங்கப்பட்டது. இந்த பிரிவானது பொது மக்களுக்கான கற்றல் மற்றும் மேம்பாட்டு மையமாக செயல்படும் அதே வேளையில், சமூக கட்டமைப்புகளில் நிலையான சமாதானம், சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும். இதில் மெய்நிகர் காட்சி, சமாதான அருங்காட்சியகம், சமாதான ஊக்குவிப்பு டிஜிடல் விளையாட்டுகள் என்பவற்றுடன் சமாதானம் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கான உள்ளூர் முயற்சிகளை ஆதரிக்கும் வெளியீடுகள், அறிக்கைகள், கற்றல் வளங்கள், வலையமைப்புகளை ஏற்படுத்துவதற்கான விவரங்கள் மற்றும் ஏனைய வளங்களைக் கொண்ட ''அறிவுத் தளத்தை'' உள்ளடக்கியதாக இருக்கும்.

ஒத்துழைப்புடன் செயற்படுவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த MAS Fabric Park இன் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.சுமிந்த டி சில்வா, ''சர்வதேச சமாதான தினத்தை நினைவுகூரும் வகையில் இந்த நிகழ்விற்கு ஆதரவளித்ததையிட்டு நாம் பெருமையடைகிறோம். MAS எப்போதும் ஒரு கூட்டான அறிவு மையத்தின் தேவையை அங்கீகரித்து வருகிறது, மேலும் படைப்பாற்றலை ஊக்குவிக்கவும் புரிந்துணர்வை வலுப்படுத்தவும் மக்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளக்கூடிய ஒரு தளத்தை வழங்க அயராது உழைத்து வருகிறது. அமைதி மற்றும் வளர்ச்சியை உருவாக்க எங்கள் சமூகத்தில் விரும்பத்தக்க மாற்றத்தை கொண்டு வர பங்காளர்களுடன் தொடர்ந்து ஒத்துழைப்போம் என்று நம்புகிறோம்'' என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

YCLI பங்குபற்றுநர்கள் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக பெற்ற அறிவை பயன்படுத்துவதற்கும் மற்றும் குறித்த நிகழ்வின் போது அனுசரணையளிக்கப்பட்டிருந்த இளைஞர் பாராளுமன்ற விவாத அமர்வுகளின் ஊடாக ஒரு பிரத்தியேகமான, நிலையான, சமத்துவமான, நடுநிலையான தேசிய இளைஞர் கொள்கையை சிபாரிசு செய்வதற்கும் குறித்த சமாதான தின கொண்டாட்டங்கள் மேலும் வாய்ப்பளித்தன. இலங்கையில் இளைஞர்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பது தொடர்பில் உரையாற்றிய ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திடடத்தின் இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி, திருமதி மாலின் ஹெர்விக், ''மாற்றத்திற்கும் சாதகமான செயற்பாட்டிற்கும் இளைஞர்களிடம் உள்ள ஆற்றல் அதிகளவில் பிரயோசனப்படுத்தப்படுவதில்லை. பொது மக்களின் ஈடுபாட்டையும் மற்றும் காத்திரமான பிரஜாவுரிமையையும் மேம்படுத்தும் பொருட்டு, இளைஞர்கள் சமூக ஒற்றுமையையும் நிலையான அபிவிருத்தியையும் ஊக்குவிக்கும் வகையில் அவர்களது சமுதாயங்களில் பங்கெடுப்பதற்கான

வாய்ப்புகளும் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றனவா என்பதை நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்'' எனக் குறிப்பிட்டார்.

இத்துடன், ஐக்கிய நாடுகள் தன்னார்வலர்கள் இன் இலங்கை நாட்டின் ஒருங்கிணைப்பாளர் திருமதி ஷர்மலி ஜெயசிங்க மேலும் குறிப்பிடுகையில், ''எல்லா நாடுகளினதும் நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என்ற வகையில், இளைஞர்களை ஒரு தேசத்தின் மிகப்பெரிய பொக்கிஷங்களில் ஒன்றாக நாம் அங்கீகரிக்க வேண்டும். பல ஆண்டுகளாக, அடிமட்டத்தில் உள்ள சமூகங்களை ஆதரிக்கும் முதல் செயற்பாட்டாளர்களாக இளம் தன்னார்வலர்கள் எப்படி முன்னணியில் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். தன்னார்வத் தொண்டு மூலம், இலங்கைக்கான UNV நிறுவனம் அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமாதானமான சமூகங்களை உருவாக்க மற்றவர்களை ஊக்குவிப்பதற்காக இளைஞர்ளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும்'' என உறுதியளித்தார்.

- முற்றும் -

**பின்தொடர்க :**

WHO Sri Lanka | Facebook | UNDP Sri Lanka | Facebook | UN Volunteers - Sri Lanka | Facebook

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:** info@unvlk.org அல்லது +94 (0) 11 2580691-7